


திரு.வி.க.நகர் தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர் கே.எஸ். இரவிசந்திரன், பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் தலைமையில், திரு.வி.க.நகர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 71, 71 அ, 72, 72 அ, 74, 74 அ ஆகிய வட்டங்களில் வாக்காளர்களை நேரில் சந்தித்து ஊர்வலமாகச் சென்று தனது நன்றியைத் தெரிவித்தார். இதில் பகுதி அவைத் தலைவர் தில்லை கதிரவன், பெரம்பூர் ராஜன், புல்லட் ரமேஷ், புவனவதி, புனிதவதி எத்திராசன், எம். சரவணன். வட்டக் கழகச் செயலாளர்கள் பரிமள சுரேஷ் பாபு மா. ருத்ரமூர்த்தி எம்.ஏ., டீக்கா எம்.இசட். அபோய் எஸ். புஷ்பராஜ் ஜி. கிருஷ்ணகுமார், வி. ஜெகன் சுவிட்பாபு, டி. ராஜி யோகாநந்தம் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிலை முகவர்கள் (BLAs) திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மயிலாப்பூர் தொகுதி வேட்பாளர் மயிலை த. வேலு 122 அ, 122 வது வட்டம், 123 அ, 123 வது வட்டம், 121 அ, 121 வது ஆகிய வட்டங்களில் வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மாநில , மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் , அனைத்து அணிகளின். மாவட்ட மாநில பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், BLA2 மற்றும் BLC அனைவரும் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

சென்னை, மே 12-

தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சுயமரியாதைக் கொள்கைத் தெளிவுள்ள பகுத்தறிவுவாதி, உழைப்பாளி.

நல்ல பரப்புரையாளரும் கூட. அவரது தேர்தல் பிரச்சார முறைகளே அதற்குத் தக்கச் சான்று. இந்த கால கட்டத்தில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகி உள்ளது இன்றியமையாத் தேவையாகும்! அவரது திறமை மேலும் வெளிவர நல் வாய்ப்பு இது!

அவர், "தலைவர் (மு.க.ஸ்டாலின்) அவர்கள் எனக்கு அளித்த இந்தப் பொறுப்பை சிறப்பாக ஆற்றுவேன்; எதிர்க்கட்சியை, எதிரிக்கட்சியாக்கிடாமல், ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சியாக நடத்திக் காட்டுவோம்" என்று தெளிவுபடுத்தியுள்ளார். நம்பிக்கை தரும் செய்தி இது!

அதுபோலவே, சட்டமன்றத்தில் நீண்ட அனுபவமும், துணிவுடன் செயல்படும் ஆற்றல் உள்ள மானமிகு கே.என்.நேரு அவர்கள், சட்டமன்ற தி.மு.க. கட்சியின் துணைத் தலைவர், கொறாடவாக மானமிகு எ.வ.வேலு அவர்கள் தேர்வும் சிறப்பானவை! வரவேற்கத்தக்கதவை!

அனைவருக்கும் நமது வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் பயன்பாட்டை குறைக்க ஒன்றிய அரசு அறிவுறுத்தல்!

புதுடெல்லி,மே.12-

நாட்டின் மீது அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நோக்கில் எரிசக்தியைத் சேமிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா கேட்டுக்கொண்டுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சுஜாதா சர்மா, "மேற்கு ஆசிய நெருக்கடி காரணமாக எரிசக்தி விநியோகத்தில் சர்வதேச அளவில் தடைகள் ஏற்பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்ததுதான். இதனால், சர்வதேச சந்தையில் விலைகளின் ஏற்ற இறக்கம் அதிகரித்து காணப்படுகிறது. எனினும், இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் மூலம், எரிபொருள் விநியோகம் சாமானிய நுகர்வோருக்கு குறைந்தபட்ச சிரமத்துடன் சென்றடைவதை உறுதி செய்ய முயன்றுள்ளது.

நமது கச்சா எண்ணெய் இருப்பு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நமது சுத்திகரிப்பு நிலையங்கள் முழு திறனுடன் இயங்கி வருகின்றன. எந்தவொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் எரிபொருள் தீர்ந்துபோனதாக தகவல் இல்லை. பெட்ரோல், டீசல் ஆகியவை போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. வீட்டு உபயோகத்துக்கான எல்பிஜி விநியோகமும் தடையின்றி நடைபெற்று வருகிறது.

கடந்த மூன்று நாட்களில் ஒரு கோடியே 26 லட்சம் எல்பிஜி முன்பதிவுகளுக்கு 1.14 கோடி எல்பிஜி சிலிண்டர்கள் வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேபோல், வணிக ரீதியிலான எல்பிஜி விற்பனை கடந்த மூன்று நாட்களில் 17,000 டன்களைத் தாண்டியுள்ளது. வாகனங்களுக்கான எல்பிஜி (Auto LPG) விற்பனையும் 762 டன்களைக் கடந்துள்ளது.

நாட்டின் அனைத்து குடிமக்களும் பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளுமாறு பிரதமர் வலியுறுத்தியுள்ளார். சாத்தியமான இடங்களில் எல்லாம் மெட்ரோ ரயில் மற்றும் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துங்கள். ஒரே வாகனத்தில் பலரும் பயணிக்கும் முறையைத் தேர்ந்தெடுங்கள். சரக்கு போக்குவரத்துக்கு ரயில்வையை முதன்மை போக்குவரத்து முறையமாகக் கருதுங்கள்.

சாத்தியமான இடங்களில் எல்லாம் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரியுங்கள். நாட்டின் மீது அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நோக்கில் எரிசக்தியைத் சேமிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.எஸ். லட்சுமணன்

### மே 12 (2009)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

திண்டுக்கல் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 18 ஆண்டுகளும் – திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிறுமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும், திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி தலைவராகவும், மாநில கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### வங்கக் கடலில் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி

# நெல்லை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் கனமழை பெய்யும்!

சென்னை, மே.12-

வங்கக் கடலில் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக திருநெல்வேலி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கிமீ உயரம் வரை நிலவுகிறது.

இதன் காரணமாக ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் உருவாகக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 12 முதல் 14ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும், 15ம் தேதி ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

### வாக்காளர் பட்டியல் தீர்ப்பாயத்தில் இருந்து

# பதவி விலகும் முன் 1,777 மனுக்களுக்கு தீர்வு கண்ட முன்னாள் நீதிபதி!

## மேற்கு வங்காள தேர்தல் அதிகாரி தகவல்!

கொல்கத்தா, மே 12 –

மேற்கு வங்காளத்தில் நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தில் நீக்கப்பட்ட வாக்காளர்களின் மனுக்களுக்கு தீர்வு காண்பதற்கு 19 முன்னாள் நீதிபதிகள் கொண்ட தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

இதில் இடம்பெற்று இருந்த கொல்கத்தா ஐகோர்ட்டு முன்னாள் நீதிபதி சிவஞானம், தனிப்பட்ட காரணங்களுக்காக சமீபத்தில் பதவி விலகினார். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர், 22 நாட்கள் மட்டுமே அந்த பணியில் இருந்தார்.

ஆனால் இந்த குறுகிய காலத்திலும் அவர் 1,777 மேல்முறையீட்டு மனுக்களுக்கு தீர்வு கண்டுள்ளதாக மாநில தேர்தல் அதிகாரியின் அலுவலகம் தெரிவித்து உள்ளது.

மேலும் பிர்பும் மாவட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு எதிராக தேர்தல் கமிஷன் தாக்கல் செய்த 60 மேல்முறையீடுகளை தள்ளுபடியும் செய்து உள்ளார்.

முக்கியமாக காங்கிரஸ் வேட்பாளர் மொதாப் ஷகிப்பிள் மேல்முறையீட்டை விசாரித்து அவரது பெயரை பட்டியலில் சேர்க்க உத்தரவிட்டு இருந்தார். பின்னர் பராக்கா தொகுதியில் போட்டியிட்ட அவர் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

### தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர்

# க.தங்கராஜ் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

திண்டுக்கல், மே.12-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றிய கழக முன்னாள் செயலாளரும், கூத்தம்பூண்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான க.தங்கராஜ் அவர்கள் நேற்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.


# காலத்தை வென்ற நாயகன்!



எண்ணிக்கையில் இல்லை வெற்றி!

நீ விதைத்த எண்ணங்களில் இருக்கிறது!

மகுடம் சூட்டிக்கொள்வது மட்டும் அரசல்ல!

மக்களின் மனதில் குடிபுகுவதே பேரரசு!

தேர்தல் களங்கள் வரலாம், போகலாம்...

ஆனால்,
விடியல் தேடி ஓடிய கால்களுக்கும்,
பசித் தீர்த்த கைகளுக்கும் தெரியும்!

நீவீர் தோற்கவில்லை என்று
திட்டங்களால் நிலைப்பெற்ற தடம்!

கல்விச் சாலைகளில் உம் பெயர் ஒலிக்கும்!

பயணச் சீட்டில்லா பேருந்துகளில்
உங்கள் நிழல் தெரியும்!

மக்களின் நலன் காக்கும் இல்லங்களில் உன் புன்னகை பூக்கும்!

எந்த ஆட்சி அமைந்தாலும், எந்தக் காற்று வீசினாலும்,
நீங்கள் ஏற்றி வைத்த வளர்ச்சி தீபம் அணையாது!

தமிழ்நாட்டின் முன்னேற்றப் பாதையில்,
உங்கள் திட்டங்களே என்றும் வழிகாட்டும் வரைபடங்கள்!

என்றும் நீ அரசன்
வாள் கொண்டு வென்றவன் வீழ்ந்திருக்கலாம்!

ஆனால் அன்பு கொண்ட ஆண்டவன் வீழ்ந்ததில்லை!

தமிழ் நிலத்தின் உயர்வுக்காக,
ஓய்வறியாது உழைத்த உண்மையான அரசன்!

நீங்கள் செய்த
சாதனைகளை காலம் சொல்லும்,

தமிழ்நாடு என்றும் உங்கள் பெயரைக் காக்கும்!

டாக்டர்
ப.முருகதாஸ்
விருத்தாசலம்






சின்னமலை வேளச்சேரி சாலையில் 169 வது வட்டக்கிளை அருகில் வட்ட துணைச் செயலாளர் துரை சரவணன் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலினை சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் 13வது மண்டல குழு தலைவர் சகோதரர் இரா. துரைராஜ், பகுதி கழகத் துணைச் செயலாளர் மு. ஆரோக்கியம், வட்டக் கழக செயலாளர் எல். ஆரோக்கியராஜ், வட்டக் கழக நிர்வாகிகள், அ. ஆரி, இரா. தமிழ்வாணன், சைதை ஆ. விக்டர் மு. சந்திரா, மற்றும் பகுதி பிரதிநிதிகள் மாவட்ட, பகுதி அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.